*7*

# விசுவாசம் வற்புறுத்திக் கேட்கிற வகையில் மக்களை நடத்துதல் (2:1-13)

தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள், தாங்கள் விசுவாசிப்பதாகக் கூறுகின்றவற்றின்படியே வாழ வேண்டும். கிறிஸ்தவர்களின் வாழ்வு மற்றும் அவர்களின் விசுவாசம் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள உறவைக் காண்பிக்க, யாக்கோபு ஒரு பரீட்சையைக் கொடுக்கிறார். ஒரு செல்வந்தர் மற்றும் ஒரு ஏழை ஆகிய இரு பார்வையாளர்கள் ஆராதனைக்குச் செல்லுதலை அவர் சித்தரிக்கிறார். அவர்கள் ஒவ்வொருவரும் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என்று கவனிக்கும்படி வாசகர்களிடத்தில் அவர் கேட்டுக் கொள்கிறார். நாம் அறிந்திராத மற்ற மக்களிடத்திலும்கூட நாம் நடந்து கொள்ளும் வகையானது, நாம் தேவனைப் பற்றி விசுவாசிப்பது என்ன என்பதற்கான ஒரு குறிப்பைத் தருகிறது. நாம் நமது மனித உறவுகளை, நமது பிதாவினிடத்தில் உள்ள நமது ஐக்கியத்திலிருந்து பிரிக்க முடியாது. யோவான் "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" என்று பொருட்செறியுள்ள வகையில் கூறுகிறார் *(1 யோவான் 4:20).*

## புத்திகூறுதல் (2:1)

யாக்கோபுவின் பாடம் பின்வரும் புத்திகூறுதலுடன் தொடங்குகிறது: *"என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக்கொள்ளாதிருப்பீர்களாக" (2:1).* இந்த நிருபத்தின் கட்டளை இயல்புக்கு வரிசைப் பொருத்தமாக, இந்தக் கூற்றானது ஒருகட்டளை என்ற வகையில் வாசிக்கப்பட வேண்டும். பிலிப்ஸ் என்பவர் இதை, "என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்துடன் பட்சபாதத்தை இணைக்க ஒருபோதும் முயற்சி செய்யாதிருங்கள்" என்று மொழிபெயர்க்கிறார். NEB வேதாகமத்தில், "என் சகோதரரே, மகிமையில் ஆளுகை செய்யும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் நீங்கள் விசுவாசம் கொண்டிருக்கையில், நீங்கள் ஒருக்காலும் பட்சபாதம் காண்பிக்கக் கூடாது" என்று வாசிக்கப்படுகிறது. இது அதிகம் இளக்கமான வசனமாக இருக்கலாம் என்றிருக்கையில், TEV வேதாகமம், யாக்கோபுவின் அர்த்தத்திற்கு மிகவும் நெருக்கமாக வரலாம்: "என் சகோதரரே! மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மீது விசுவாசம் கொண்டுள்ளவர்கள் என்ற வகையில், உங்கள் வாழ்வில் ஒருக்காலும்

நீங்கள், மக்களை அவர்களின் புறம்பான தோற்றத்தின் காரணமாக, மாறுபட்ட வகைகளில் நடத்தக் கூடாது.”

அடுத்த பல வசனங்களில் உள்ள ஒவ்வொரு விஷயமும் இந்தக் கட்டளையின் மீதே விரிவாக உரைக்கப்பட்டுள்ளது.

## உதாரணம் (2:2-4)

2 முதல் 4 வரையிலான வசனங்கள், கிறிஸ்தவர்களின் சபை கூடுகைகளில் இருக்கைக்கு வழி நடத்துபவர்களுக்கு ஒழுக்க நெறிவகை ஒன்றை அளிக்கிறது. தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் சபைகூடுகைகளுக்கு பார்வையாளர்கள் வந்தனர் என்று யூகித்துக் கொள்ளுதல் பாதுகாப்பானதாக இருக்கும். யாக்கோபு இங்கு குறிப்பிடும் நடத்துதலைத் தாமே நேரில் கண்டிருக்கலாம். பார்வையாளர்கள் கிறிஸ்தவர்களா அல்லது கிறிஸ்தவரல்லாதவர்களா என்று யாக்கோபு கூறுவதில்லை மற்றும் அது ஒரு பொருட்டாக இருப்பதில்லை. இங்கு செயல்விளக்கப்படுத்தப்பட்டுள்ள எண்ணப்போக்குகள், இவ்விருவரின் விஷயத்திலுமே தவறானதாக இருந்தன.

ஆனால் செல்வந்தரான மனிதரைப் பற்றி யாக்கோபு சில விஷயங்களைக் கூறுகிறார். அந்த மனிதர் பொன்மோதிரமும் நேர்த்தியான உடைகளும் உடுத்தி யிருந்தார் (வசனம் 2), இது அவர் ஒரு பிரபுவாக அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலராக இருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிப்பதாகக் காணப்படும். அவர் செல்வந்தராக இருந்ததோடு, அதிகாரம் நிறைந்தவராகவும் காணப்படுகிறார்.

தவறாக வழிநடத்தப்பட்டிருந்த இந்த சகோதரர்கள் என்ன நினைத்துக் கொண்டிருந்தனர்? நேர்த்தியான உடைகள் நேர்த்தியான மனிதரின் அடையாளம் என்றும், கந்தலான உடைகள் அவற்றை அணிந்திருப்பவரின் பண்பைப் பிரதிபலிக்கின்றன என்றும் அவர்கள் நினைத்தார்களா? செல்வம் என்பது ஒரு மனிதரின் மதிப்பிற்கு வழிகாட்டி என்று அவர்கள் நினைத்தார்களா? “ஜாதி முறைமை” என்பது இயேசுவுக்கு ஏற்புடையதாக இருக்கும் என்று எப்படி ஒருவர் நினைத்துப் பார்க்க முடியும்?

அந்த முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களிடத்தில் நாம் கடுமையாக இருப்பதற்கு முன்னால், நாம் எப்போதாவது அதே வகையான சிந்தனை மற்றும் செயல்பாடுகளினால் குற்றப்பட்டு இருக்கிறோமா என்று நம்மையே நாம் கேட்டுக்கொள்வோமாக. விரும்பத்தக்கவர்கள் என்ற நிலையிலிருந்து குறைவுபடுபவர்களாக நாம் யாரைக் கருதுகிறோமோ, அவர்களால் நமது சபை கூடுகைகள் நிரம்பி வழிகிறபோது நாம் எவ்வாறு பதில்செயல் செய்கிறோம்? நமது சபை கூடுகைகளுக்கு வரும் *எந்த ஒரு* பார்வையாளரையும் நாம் எவ்வாறு நடத்துகிறோம்? ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, டிக் மார்சியர் என்பவர், “நாம் எப்படி மதிப்பிடப்படுவோம் என்பது பற்றி நீங்கள் நினைப்பது என்ன?” என்ற தலைப்பில் சபை அறிக்கை இதழில் ஒருபாடத்தை எழுதினார். அந்தப் பாடத்தில் திகைக்க வைக்கும் சில தகவல்களும் முடிவுகளும் அடங்கியிருந்தன.

> சபைகள் உண்மையில் எதைப் போன்று இருந்தன என்று கண்டறிவதற்காக, ஒரு மனிதர், வரிசையாக வந்த ஞாயிற்றுக்கிழமைகளில் 18 வெவ்வேறு சபைகளுக்குப் பார்வையாளராகச் சென்றார். இந்த சம்பவத்தை அறிவித்த அந்த அறிக்கையின்படி, அம்மனிதர், நான் முன்வரிசைக்கு

அருகில் அமர்ந்தேன். ஆராதனைக்குப் பின்பு, நான் மெதுவாகப் பின்னால் நடந்து சென்றேன், பின்பு இன்னொரு இடைவெளியைப் பயன்படுத்திப் பெரிய அறைக்கு முன்னும் பின்னுமாகத் திரும்பினேன். நான் புன்னகை பூத்தேன். நான் நேர்த்தியாக உடை உடுத்தியிருந்தேன். ஒரு நபரிடத்தில் என்னை "ஐக்கிய அறை, பிரசங்கியாரின் படிப்பு இடம், முதலியவற்றிற்கு" செல்லுமிடத்தைக் காண்பிக்கும்படி கேட்டேன். காபி வழங்கப்பட்டால் நான் அதில் பங்கேற்றேன். நான் பெற்றுக்கொண்ட வரவேற்பை மதிப்பிட நான் ஒரு அளவியைப் பயன்படுத்தினேன்" என்று கூறினார்.

அவரது அளவி பின்வருமாறு இருந்தது:

10 - ஆராதிப்பவர் ஒருவரிடமிருந்து ஒரு புன்னகைக்கு.

10 - அருகில் அமர்ந்திருப்பவரிடமிருந்து ஒரு வாழ்த்துக்கு.

100 - பெயர்கள் பரிமாற்றம் ஒன்றுக்கு.

200 - திரும்ப வரும்படியான அழைப்பு ஒன்றுக்கு.

1000 - ஆராதிக்கும் இன்னொருவரை அறிமுகம் செய்வித்தல் ஒன்றுக்கு.

2000 - பிரசங்கியாரைச் சந்திக்கும்படியான அழைப்பு ஒன்றுக்கு.

அவர் கண்டறிந்தது என்ன என்று அறிய நீங்கள் ஆர்வமாக இருப்பீர்களா? அந்த 18ல் பதினொரு சபைகள் 100க்கும் சற்று அதிகமான மதிப்பெண்களைப் பெற்றன, மற்றும் 5 சபைகள் 20க்கும் குறைவான மதிப்பெண்களைப் பெற்றன. அவரது முடிவு: "உபதேசம் வேதாகமரீதி யானதாக இருக்கலாம், பாடுதல் தெய்வீக ஊக்கம் பெற்றதாக இருக்கலாம், பிரசங்கம் ஆவியை மேலே எழுப்பக் கூடியதாக இருக்கலாம்; ஆனால் ஒரு பார்வையாளர், தாம் அங்கிருக்கிறார் என்பது பற்றி எவரொருவரும் அக்கறை கொள்ள வில்லை என்று கண்டறிகிறபோது, அவர் திரும்பவும் அங்கு வரச் சாத்தியம் இல்லை,"

நாம் எவ்வாறு மதிப்பிடப்படுவோம் என்பது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நம்மில் ஒவ்வொருவரும், பார்வையாளர்கள் வரவேற்கப்படுவதாக, மதிக்கப்படுவதாக மற்றும் விரும்பப்படுவதாக உணரச் செய்யப் பிரயாசப் படவேண்டும். இந்த ஞாயிற்றுக்கிழமையில், நீங்கள் அறியாது இருப்பவர்களைச் சென்றடையும் விசேஷித்த முயற்சியை மேற்கொள்ளுங்கள்.

*பட்சபாதத்தைக் காண்பித்த முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் மீது கொண்டிருந்தது போலவே நம்மீது யாக்கோபு நிலைகுலைந்து போவாரா?*

*பட்சபாதத்தின் செயல்விளக்கம், நாம் நமது விசுவாசத்தை நடைமுறைப் படுத்துவதில்லை என்பதற்குச் சாட்சியமாக உள்ளது. நாம் இயேசுவினுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம், அந்த இயேசு பட்சபாதம் காண்பிக்கவில்லை. பரிசேயர் தாங்கள் எவ்விதமான அறிக்கையைப் பெறத் தகுதியுள்ளவர்கள் என்று நினைத்தார்களோ, அந்த அறிக்கையை அவர்களுக்கு இயேசு கொடுத்திருந்தால், அவர்கள் அவரை ஏற்றுக்கொண்டிருப்பார்களோ என்று நீங்கள் வியப்படைந்தது உண்டா? இயேசு புறம்பான தோற்றத்தினால் மனம் ஈர்க்கப்படவில்லை, ஆனால் அவர் உள்ளாக இருக்கும் இருதயத்தில் கண்ணோக்கினார். இதைப்பற்றிப்*

பரிசேயர்களும்கூட, “நீர் சத்தியமுள்ளவரென்றும், தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவரென்றும், நீர் முகதாட்சிணியம் இல்லாதவராகையால் எவனைக்குறித்தும் உமக்குக் கவலையில்லையென்றும் அறிந்திருக்கிறோம்” என்று கூறும்போது உணர்ந்தறிந்து இருந்தனர் (மத்தேயு 22:16). அவ்வாறே, இயேசு சமூக அந்தஸ்து அல்லது செல்வங்கள் ஆகியவற்றினாலும் மனம் ஈர்க்கப்படாது இருந்தார். அவர், செல்வந்தரான ஒரு பரிசேயரைக் காட்டிலும் ஒரு ஏழை விதவையின் மீதே அதிகம் மன ஈர்ப்பு உடையவராக இருந்தார். பாவிகளின் வாழ்வினுடைய புறம்பானவற்றை வெட்டிப் பிளந்து உள்ளாக இருக்கும் வலிவார்ந்தவற்றை இயேசு காண முடிந்தவராக இருந்தார். அவர் சீமோனிடத்தில் வேறு எவரும் கொண்டிராத பாறையைக் காண முடிந்தது. பழிப்புரைக்கு ஆளான வரிவசூலிப்பவரான மத்தேயுவிற்குள், உண்மைநிறைந்த சீஷர் ஒருவரை அவர் கண்டார். கிணற்றண்டையில் இருந்த, பாவம் நிறைந்த வாழ்வைக் கொண்டிருந்ததால் பொதுமக்களால் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு பெண்ணிற்குள் மாபெரும் அறுவடைக்கான கருவியை இயேசுவினால் காண முடிந்தது. நாம் இயேவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றப் போகிறோம் என்றால், ஒரு நபர் எவ்வாறாக இருக்கிறார் என்று காண்பதைக் கடந்து அவர் எவ்வாறு இருக்க முடியும் என்பதைக் காணவேண்டும்.

## விரிவாக்கம் (2:5)

பட்சபாதம் என்பது தவறானதாக உள்ளது, ஏனெனில் அது தேவனுடைய எண்ணப்போக்கிற்கு, சிறப்பாக ஏழைகளிடத்தில் அவர் கொண்டுள்ள எண்ணப்போக்கிற்குச் சீர்பொருத்தம் அற்றதாக உள்ளது (2:5, 6அ). செல்வந்தர் ஏழை என்பவர்களிடத்தில் பட்சபாதம் காட்டுதல் பற்றி யாக்கோபுவின் போதனையானது அவரது நாட்களில் மிகவும் வலியுறுத்தப்பட வேண்டிய போதனையாக இருந்தாலும், அவர் அத்துடன் இந்தப் போதனையை மட்டுப்படுத்தவில்லை. அவரது வாசகர்கள், புறக்கணிப்புக்கு ஆளான ஏழை மனிதர் தேவனுடைய இருதயத்தில் விசேஷித்த இடத்தைக் கொண்டிருக்கிறார் என்பதைக் காண வேண்டும். ஏழை மனிதர் இந்த உலகத்தின் பொருட்களைச் சார்ந்திராதபடியால், அவரே சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளக் கூடியவராக இருக்கிறார் என்ற சாத்தியக்கூறு உள்ளது. நமது தவறான எண்ணப்போக்கானது, அம்மனிதரை, தேவன்மீது அன்புகூருகிறவர்களுக்கு இராஜ்யத்தில் உள்ள சுதந்தரம் பற்றி அறிதலில் இருந்து திருப்பிவிடலாம்.

இவை எல்லாவற்றிற்கும் அப்பால், செல்வந்தர்கள் கிறிஸ்தவர்களிடத்தில் எவ்வாறு செயல்பட்டிருந்தனர் என்பதைப் பற்றி மாத்திரம் நினைத்துப் பாருங்கள் (2:6ஆ, 7). எல்லாச் செல்வந்தர்களைப் பற்றியும், யாக்கோபு ஒரு கண்டனப் போர்வையையோ அல்லது ஒரு குற்றச்சாட்டையோகூட மாத்திரம் எடுத்துரைக்கவில்லை. யாரைக் கையாள வேண்டியதாக இருந்ததோ அவர்களை மாத்திரம் அவர் குறிப்பிட்டார். அவர்கள் குற்றம் சாட்டப்பட்டிருந்த, “கிறிஸ்தவர்களை ஒடுக்குதல், அவர்களை நியாயாசனங்களுக்கு முன்பாக இழுத்துச் செல்லுதல், இயேசுவின் நாமத்தைத் தூஷித்தல்” என்ற குறிப்பான மூன்று பொல்லாங்குகளை யாக்கோபு குறிப்பிடுகிறார். வரிகளுக்கு இடையில் யாக்கோபு, “இந்த உலகத்தில் நீங்கள் ஏன் அவர்களுக்குப் பட்சபாதம் காண்பிக்க வேண்டும்?” என்று கேட்கிறார்.

யாக்கோபு தமது கருத்தை ஆற்றல்மிக்க வகையில் மனதிற்குள் செலுத்துகிறார். அவர் ராஜரீகப் பிரமாணம் என்று அழைக்கும் ஒன்றை மேற்கோள் காண்பிக்கிறார்: "உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக." இராஜரீகப் பிரமாணத்தை இவ்விடத்தில் கொண்டு வருதலில் அவர், மற்றவர்களிடத்தில் நமது செயல்பாடு மற்றும் எண்ணப்போக்கு என்பதே கிறிஸ்தவப் பண்பிற்கான அடிப்படைப் பரீட்சையாக உள்ளது என்று மறைமுகமாகக் குறிப்பிடுகிறார்.

"மற்ற மக்களைச் சரியான வகையில் நடத்துங்கள்" என்று கூறுவது போதுமான அளவுக்கு எளிமையானதாக உள்ளது, ஆனால் அதை நடைமுறைப்படுத்துதல் என்பது எவ்வளவு கடினமானதாக உள்ளது! மற்ற மக்களைச் சரியான வகையில் நடத்துதல் என்பதன் நுணுக்கமான பகுதிகள் அடிக்கடி நமக்குப் பிரச்சனை ஏற்படக் காரணம் ஆகின்றன. நாம் ஒரு நபரை, அல்லது ஒரு குழுவை வெளிப்படையாக, பட்சபாதமான வகையில் நடத்தாமல் இருக்கலாம், ஆனால் நாம் கருத்து வேறுபடுகிற யாரேனும் ஒருவரைக் கடுமையாக விமர்சிக்கக் கூடும்.

அடுத்ததாக யாக்கோபு, கையாள்வதற்குக் கடினமான முட்டிப்பந்து ஒன்றை நம்மீது எறிகிறார்: "எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்" (2:10). யாக்கோபு பின்வரும் கேள்வியை முன்னெதிர் பார்த்திருப்பார் என்பதாகத் தோன்றுகிறது: "பட்சபாதம் காண்பித்தல் பற்றி ஏன் இவ்வளவு அதிகம் பேசுகிறீர்கள்?" யாக்கோபு, தேவனுடைய பிரமாணத்தை மீறுகிற எந்தப் பாவமும் தேவனுடனான ஐக்கியத்தை முறித்துப் போடுகிறது என்று காண்பிக்க விரும்பினார். நான் தேவனுடைய எல்லாப் பிரமாணங்களையும் கடைப்பிடித்திருந்தும், அவற்றில் *ஒன்றை* மனப்பூர்வமாகப் புறக்கணித்திருந்தால், நான் அவருடனான ஐக்கியத்தை முறித்துப்போட்டவனாக இருக்கிறேன். நமது சந்தர்ப்பப் பொருளில், அது நான் கறுப்பர்கள், வெள்ளையர்கள், மெக்சிகோ நாட்டவர்கள், ரஷ்யர்கள், ஏஜியர்கள், ஒக்கியர்கள் ஆகியோர்களை, அவர்கள் கறுப்பர்கள், வெள்ளையர்கள், மெக்சிகோ நாட்டவர்கள், ரஷ்யர்கள், ஏஜியர்கள், ஒக்கியர்கள் ஆக இருப்பதால் மாத்திரமே வெறுத்தால், நான் எனது ஆத்துமாவை இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்குகிறேன். கொலை மற்றும் விபச்சாரம் ஆகியவற்றைப் பற்றி யாக்கோபு ஏற்படுத்துகிற குறிப்புகள் (வசனம் 11), பட்சபாதத்தின் தீவிரமான இயல்பைக் காண்பிக்க நோக்கம் கொண்டுள்ளன. அவற்றை நாம் வழக்கமாக மாபெரும் பாவங்கள் என்று கருதுகிறோம், ஆனால் பட்சபாதம் காண்பித்தல் என்பது அதே மட்டத்தில் உள்ளது என்று நமக்குக் காண்பிக்க யாக்கோபு விரும்புவதாகக் காணப்படுகிறது.

"இராஜரீகப் பிரமாணத்தை" நாம் மீறினால், நாம் தேவனைப் பிரியப்படுத்த இயலாது என்பது தெளிவு. தேவன் நமது வார்த்தைகள், செயல்கள் மற்றும் எண்ணப்போக்குகள் ஆகியவற்றை நியாயம் தீர்ப்பார் என்பதால், தேவன் நம்மிடத்தில் பிரியமாக இருக்கும்படியான வழியில் நாம் வாழவேண்டியது அவசியமாக உள்ளது. 13ம் வசனத்தில் யாக்கோபு, மலைப்பிரசங்கத்தில் இயேசுவின் வார்த்தைகளில் இருந்து எதிரொலிக்கிறார்: இரக்கம் நிறைந்தவர்களே இரக்கம் பெறுவார்கள். நம்மில் சிலர் இரக்கம் நிறைந்தவர்களாக இருப்பதைத் தவிர வேறு எவ்வகைப்பட்டவர்களாகவும் இருக்கிறோம்! தேவன்

இரக்கத்திற்காகப் பார்த்துக்கொண்டிருப்பதால், நாம் மக்களைக் குறித்த நமது எண்ணப்போக்குகளை மாற்றுதல் அவசியமாக உள்ளது.

## முடிவுரை

நமது விசுவாசமானது, மக்கள் எவ்வகையில் நடத்தப்படவேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அவ்வகையில் அவர்களை நாம் நடத்தக் காரணமாயிருக்க வேண்டும். இது தேவனுக்கு முக்கியமானதாக இருப்பதால், நமக்கும் முக்கியமானதாக இருக்க வேண்டும்.